**இரண்டாவது சுகாதாரத்துறை அபிவிருத்திச் செயற்திட்டம் – கூறு – II - 2018**

இரண்டாவது சுகாதாரத்துறை அபிவிருத்திச் செயற்திட்டம் – கூறு – II இன் 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2013 ஆகஸ்ட் 19 ஆம் திகதிய 5228–எல்கே ஆம் இலக்க நிதியளிப்பு உடன்படிக்கையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

நிதியளிப்பு உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் முன்னாள் சுகாதார அமைச்சாகவிருந்த தற்போதைய சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சினால் தேசிய மட்டத்தில் அமுல்படுத்தப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்ததுடன் அதே நேரத்தில் மாகாண மட்டத்தின் நடவடிக்கைகள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் மேற்கொள்ளப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது. செயற்திட்ட மதிப்பீட்டு ஆவணத்தின் பிரகாரம், 2013–2017 ஆண்டிற்கான தேசிய சுகாதார அபிவிருத்தித் திட்டத்தை அமுல்படுத்துவதற்கான நிதி உதவியை வழங்குவதற்காக செயற்திட்டம் அமுல்படுத்தப்படுகின்றது. ஊட்டச்சத்தின்மை மற்றும் தொற்றாத நோய்கள் என்பவற்றின் சவால்களிற்கு சிறந்த பதிலளிப்பதற்கான இயலுமைக்காக பொதுச் சுகாதாரத்தின் செயலாற்றல் நியமங்களை தரமுயர்த்துவதே செயற்திட்டத்தின் குறிக்கோள்களாக உள்ளன. நிதியளிப்பு உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 25,270 மில்லியனிற்குச் சமமான எஸ்டிஆர் 129.8 மில்லியன் (200 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்கள்) ஆனதுடன் அதில் ரூபா 1263.50 மில்லியனிற்குச் சமமான எஸ்டிஆர் 6.5 மில்லியன் (10 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்கள்) செயற்திட்டத்தின் கூறு – II இன் கீழ் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்டிருந்தது. செயற்திட்ட நடவடிக்கைகள் 2013 யூலை 01 இல் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 2018 செப்டம்பர் 30 அளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்தது. இந்த அறிக்கையானது தேசிய மட்டத்தில் சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் வேறாகச் சமர்ப்பிக்கப்பட்ட செயற்திட்டத்தின் கூறு – II இற்கான நிதிக்கூற்று என்பவற்றின் மீதான கருத்துரைகளை உள்ளடக்கியிருந்தது.

## 1.3 அபிப்பிராயம்

நிதிக்கூற்றுக்களானவை செயற்திட்டத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

**1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது நான் அடையாளம் காணும் யாதேனும் உள்ளகக் கட்டுப்பாட்டில் உள்ள குறிப்பிடத்தக்க குறைபாடுகள் உட்பட , குறிப்பிடத்தக்க கனக்காய்வு கண்டுபிடிப்புக்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக ஆளுகைக்கு உட்பட்ட நபர்களுடன் நான் தொடர்பு கொள்கிறேன்.

## 2. பௌதீக செயலாற்றல்

### 2.1 செயல்திட்டத்தின் நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம

| நடவடிக்கை | கணக்காய்வு பிரச்சினை | தாக்கம் | முகாமைத்துவ கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| தேசிய கர்ப்பப்பை வாய் புற்றுநோய் திரையிடல் (Screening) திட்டத்தினுள் HPV/DNA திரையிடல் சோதனையை இணைப்பதற்கான சாத்தியக்கூறு மற்றும் இயலுமையை மதிப்பீடு செய்வதற்கான ஆரம்ப ஆய்வுக் கற்கை. | 2018 செப்தெம்பர் 30 இற்கு முன்னராக சம்பந்தப்பட்ட ஆராய்ச்சியினை பூர்த்தி செய்வதற்கு உடன்பட்டது. மற்றும் ஆராய்ச்சி காலப்பகுதியின் போது பரிசோதிப்பதற்கு திட்டமிடப்பட்ட 10,000 மாதிரிகளில் 2019 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரைக்கும் கூட 8,635 மாதிரிகள் மாத்திரம் பரிசோதிக்கப்பட்டன. அதன் காரணமாக, இலங்கையில் கர்ப்பப்பை வாய் புற்றுநோயை திரையிடுவதற்கான ஆரம்ப முறையாக கோபாஸ் 4800 HPV/DNA சோதனைகளை இணைப்பதன் மூலம் சோதனைகளை மேற்கொள்வதற்கான சாத்தியத்தை தீர்மானிப்பதற்கான ஆராய்ச்சி நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வில்லை. உபகரணங்களை பெறுகை செய்வதற்கும், | உத்தேசித்த செயற்திட்ட இலக்குகளை அடைய முடிந்திருக்க வில்லை. | இறுதி அறிக்கையை விரைவாக வெளியிடுவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அறிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | செயற்திட்ட காலப்பகுதிக்கு உத்தேசித்த இலக்குகள் அடையப்பட வேண்டும். |

HPV/DNA திரையிடலுக்கான சோதனைகளை இணைப்பதின் சாத்திய கூறினை மதிப்பிடுவதற்கான கல்விச் சுற்றுலா ஒன்றின் மீது வெளிநாடு செல்வதற்கான வசதிகளை வழங்குவதற்கும் ரூபா மில்லியன் தொகையானது செயற்திட்டத்தால் செலவு செய்யப்பட்டிருந்தது என்று அவதானிக்கப்பட்டது.